செய்தி வெளியீடு எண்: 20 நாள்: 09.10.2019

**தேனி மாவட்டம்,**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி பெரியாறு பாசன பகுதிகளிலுள்ள ஒரு போக சாகுபடி பாசனத்திற்காக வைகை அணையிலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தண்ணீரை திறந்து வைத்தார்:-**

*****

*தேனி மாவட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி பெரியாறு பாசன பகுதிகளிலுள்ள ஒருபோக சாகுபடி பாசனத்திற்காக இன்று (09.10.2019) வைகை அணையிலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தண்ணீரை திறந்து வைத்து தெரிவித்ததாவது:*

*விவசாயிகள் பயன்பெறும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெரியாறு பாசன பகுதிகளிலுள்ள ஒருபோக பாசனப்பரப்பான 85,563 ஏக்கர் நிலங்களும் மற்றும் திருமங்கலம் பிரதான கால்வாயின் கீழ் உள்ள ஒருபோக பாசனப் பகுதியான 19,439 ஏக்கர் நிலங்களும் என ஆக மொத்தம் 1,05,002 ஏக்கர் நிலங்களுக்கு வைகை அணையிலிருந்து வினாடிக்கு 1130 கனஅடி வீதம் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் இன்று முதல் 120 நாட்களுக்கு நீர்இருப்பு மற்றும் நீர்வரத்து பொருத்து தண்ணீர் திறந்துவிடப்படும்.*

*இத்தண்ணீர் திறப்பால், மதுரை மாவட்டத்தில் 98,764 ஏக்கர் நிலங்களும், திண்டுக்கல் மாவட்டத்தில் 199 ஏக்கர் நிலங்களும் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் 6,039 ஏக்கர் நிலங்களும் பாசனவசதி பெறும். மேலும் விவசாய பெருமக்கள் குறுகியகால பயிர்களை நடவுசெய்தும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தியும் அதிகமகசூல் பெற்று பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.*

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் ச.கந்தசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் (மதுரை) பி.செல்வராஜ், பொதுப்பணித்துறை (நீர் வள ஆதார அமைப்பு) பெரியாறு வைகை வடிநிலகோட்ட செயற்பொறியாளர் சுப்பிரமணியன், பெரியாறு பிரதான கால்வாய்க் கோட்டம் (மேலூர்) செயற்பொறியாளர் சுந்தரப்பன், பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் சி.ஜெயப்ரிதா, உதவி செயற்பொறியாளர்கள் செல்வம், குபேந்திரன், ஆனந்தன், மாயகிருஷ்ணன் வேளாண்குடி பெருமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***